# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 நவம்பர் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 15.11.2018–ந் தேதி மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

இந்நகர் பகுதியில் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சிக்கு பள்ளமோர்குளம் கிராமம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் ரூ.217.95 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு, (IUDM: 73.01+ IUDM: 73.01+ SBM: 71.92 lakhs) நிதி ஒதுக்கீடு செய்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ந.க.எண்.26888/UGSS–2/2018 நாள்.12.11.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ்பள்ளமோர்குளம் கிராமம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை Faecal Sludgae and Septage Management-Faecal Sludge Treatment Plant) அமைக்கும் பணி. 20 KLD | **217.95** |

**(கோப்பு எண்.1022/2018/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.460** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகர் பொதுமக்களுக்கு தூய்மை இந்தியா இயக்கம் விழிப்புணர்வு, திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்ட விபரப்படியான பல்வேறு விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் அச்சடித்து வினியோகம் செய்வதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 450 நாள் 30.10.2018–ன் படி ரூ 6,25,000/–க்கு நிர்வாக அனுமதி பெற்று அதன் அடிப்படையில் இந்நகராட்சி விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் அச்சடித்து வினியோகம் செய்வதற்கு 07.11.2018–ந் தேதி கோரப்பட்ட ஒப்ந்தப்புள்ளியின் அடிப்படையில் வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் விபரம் | அளவு | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | சிதம்பரனார் லேபர் காண்ட்டிராக்ட் சர்வீஸ், தூத்துக்குடி ரூ | சிதம்பரனார் மாவட்ட அச்சக சர்வீஸ் கோவில்பட்டி ரூ | திருநெல்வேலி மாவட்ட காண்ட்டிராக்டர் லேபர் சர்வீஸ் திருநெல்வேலி ரூ |
| 1 | மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தொடர்பான விபர ஸ்டிக்கர் | A4 | 4.60 | 4.70 | 5.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தொடர்பான விளக்கப்படம் ஸ்டிக்கர் | A4 | 4.60 | 4.70 | 5.00 |
| 3 | மக்கும் மற்றும் மக்காத குப்பை பெரிய சைஸ் டோர் ஸ்டிக்கர் | A3 | 14.20 | 14.30 | 14.50 |
| 4 | பிளாஸ்டிக் தடை செய்தல் ஸ்டிக்கர் | A3 | 13.70 | 13.80 | 14.00 |
| 5 | கேரிபேக் இலவசம் இல்லை ஸ்டிக்கர் | A3 | 13.70 | 13.80 | 14.00 |
| 6 | நீலக்கூடை மற்றும் பச்சை நிற கூடைகள் ஸ்டிக்கர் | A3 | 13.70 | 13.80 | 14.00 |
| 7 | டெஙகு உற்பத்தி இடஙகளுக்கான ஸ்டிக்கர் | A3 | 14.20 | 14.30 | 14.50 |
| 8 | Smile Sticker | A4 | 5.80 | 5.90 | 6.00 |
| 9 | 52 கலம் டெஙகு ஸ்டிக்கர் | A4 | 5.80 | 5.90 | 6.00 |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்ந்தப்புள்ளி கொடுத்துள்ள சிதம்பரனார் லேபர் கான்ட்டிராக்ட் சர்வீஸ், தூத்துக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.461** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் **TN65 Q 9807** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை (1. கிளெச் வேலை, 2. ஆயில் சர்வீஸ் 3. பிரேக் ஒர்க்ஸ் 4. புதிய டோர் மாற்றுதல் 5. ஸ்டேரிங வேலை 6. பெயின்டிங 7. எலக்ட்ரிக்கல் வேலை 8. கியர் வேலைகள் போன்ற பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு ஓட்டுநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் வாகனத்தை பழுது நீக்கம் செய்து இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,49,500/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொதுசுகாதார பணியின் அவசரம் கருதி உள்ளூர் நிறுவனஙகளில் விலைப்புள்ளி பெற்று மேற்காணும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. உத்தேச செலவீனம் ரூ.2,49,500/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் **TN65 Q 9807** –ல் பழுதுநீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.462** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

கீழக்கரை நகராட்சி உழுவை மற்றும் இழுவை (Tractor & Trailer) TDR 4355 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கு டிராக்டர் டைமிங் செயின் அஜிஸ்டர் அசெம்ள் மாட்டி டீசல் பில்டர் ஆயில் பில்டர், பவர் ஷோன் பேட்டரி, ரேடியேட்டர், Air பில்டர் செட், டயனோமா காயில், எலக்ட்ரிக் ஒர்க், வீல் பேரிங், ஒஸ் ஹைட்ராலிக் மற்றும் இதர பழுது நீக்க பணிகள் செய்து தருமாறு உழுவை மற்றும் இழுவை ஒட்டுநரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்நகர் பொதுசுகாதார பணியின் அவசரம் கருதி மேற்காணும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளும் பொருட்டு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் அவர்களால் திரு. சி. ராஜ் ஒட்டுநர் (பொ) அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.38,022/–அனுமதித்து வழங்க கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உழுவை மற்றும் இழுவை (Tractor & Trailer) வாகனம் TDR 4355–யை பழுது நீக்கம் செய்த வகைக்கு செலவினம் ரூ.38,022/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.463** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 5**

தூய்மை பாரத இயக்கம் தலைப்பின் கீழ் கீழக்கரை நகராட்சிக்கு “Fecal Sludge septage Management Plant” அமைக்க 7வது மாநில உயர் ஆளுமை கூட்ட நடவடிக்கையிலும் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை நிலை எண்.82, நாள்.26.08.2018ல் மேற்படி சுத்திகரிப்பு நிலையம் 20 கிலோ லிட்டர் (20 KLD) கொள்ளளவில் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மத்திய அரசு 33 சதவீதம் மற்றும் ஐ. யு. டி. எம் திட்டத்தின் கீழ் 67 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. அதன்படி முதற்கட்டமாக மேற்படி திட்டம் செயல்படுத்தப்பட்ட உள்ள இடமான நகராட்சி பள்ளமோர்குளம் உரக்கிடங்கில் மண் பரிசோதனை ஆய்வு செய்து அதற்கான தருமாறு, திண்டுக்கல், அண்ணா பல்கலைக் கழக தலைவர் அவர்களுக்கு 07.11.2018ம் தேதி இவ்வலுவலகம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி மேற்கண்ட உரக்கிடங்கில் மண் பரிசோதனை Soil Test (SBC) For 3 Points ஆய்வு செய்ததற்கான கட்டணம் ரூ.88,500/– வழங்கக் கோரி திண்டுக்கல், அண்ணா பல்கலைக் கழக துறைத் தலைவர் அவர்களின் கடிதம் எண்.PMC.004/civil/CS/2018, நாள்.13.11.2018ன்படி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விபரப்படி கட்டணம் ரூ.88,500/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.1022/2018/இ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.464**அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

இந்நகராட்சிப் பகுதிகளில் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைக்கும் பொருட்டு, சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூ.300.00 இலட்சத்திற்கு **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP) 2018–2019**ன் கீழ் **சிப்பம்–1 மற்றும் சிப்பம்–2 (Package-I& II)**–ல் கண்டுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.398, நாள்.29.06.2018–ன்படி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை

உத்திரவு ந.க.எண். 12981/2018/E3 நாள்.09.07.2018 நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன்படி 23.10.2018–ம் தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 30.10.2018–ந் தேதி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் விலைக்கூறல் (Price Bid) 02.11.2018-ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**[கோப்பு எண்.326/ 2018/இ1]**

**<u>Package –I மதிப்பீடு ரூ. 100 லட்சம்</u>**

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | **<u>சிப்பம்–1 (Package-I)</u>**<br><br>அண்ணாநகர் மூன்று குறுக்குத்தெருக்கள், முத்துச்சாமிபுரம் இரண்டு குறுக்குத் தெரு, பெத்திரி தெரு பகுதிகள், பட்டாணி அப்பா மூன்று குறுக்கு தெருக்கள், வள்ளல் சீதக்காதி சாலை (உசைனியா மஹால்) முதல் இந்து பஜார் வரை, நான்கு பஙகளா முதல் கிழக்கு நாடார் தெரு வரை பேவர்கல் சாலை பதிக்கும் பணி. | திரு.எம்.கே.திருமுருகன் ஒப்பந்ததாரர், எண்.27, வடக்குபுதுத்தெரு, இராமநாதபுரம் | ரூ 1,04,20,305/– 4.20% மதிப்பீட்டு தொகையைவிட கூடுதல் |
| 2 | | M/S.வெஙகடேஷ்வரா, கன்ஸ்டிரக்சன், 97/1 – யாதவா தெரு, வெளிப்பட்டிணம் (அஞ்சல்) இராமநாதபுரம். | ரூ 1,08,41,930/– 8.42% மதிப்பீட்டு தொகையைவிட கூடுதல் |

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

1. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அஙகீகரிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட 4.20% கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், மூலப்பொருட்களின் விலை மார்க்கெட்டில் கூடுதலாக உள்ளதை சுட்டிக் காட்டி விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.20 சதவீதம் கூடுதலாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.465</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 7</u>

இந்நகராட்சிப் பகுதிகளில் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைக்கும் பொருட்டு, சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூ.300.00 இலட்சத்திற்கு **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP) 2018–2019**ன் கீழ் **சிப்பம்–1 மற்றும் சிப்பம்–2 (Package-I& II)**–ல் கண்டுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.398, நாள்.29.06.2018–ன்படி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 12981/2018/E3 நாள்.09.07.2018 நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன்படி

23.10.2018–ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 30.10.2018–ந் தேதி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் விலைக்கூறல் (Price Bid) 02.11.2018-ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**[கோப்பு எண்.326/ 2018/இ1] <u>Package –II மதிப்பீடு ரூ. 200 லட்சம்</u>**

| **வ. எண்** | **வேலையின் விபரம்** | **ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | **<u>சிப்பம்–2(Package-II)</u>** பழைய பேருந்து நிலையம் முதல் சஙகுவெட்டி தெரு வரை, நடுத் தெரு ஜின்னா தெரு வரை, கருப்பட்டிக்காரத் தெரு மற்றும் ஒடக்கரைப்பள்ளி முன்புறம், வடக்குத் தெரு பகுதிகள், காலவாசல் சந்து மற்றும் சி.எஸ்.ஐ சர்ச் பின்புறம், மீனாட்சிபுரம் சாலை, மேலத்தெரு பள்ளிவாசல் தெரு முதல் கோல்டன் பீச் சாலை வரை மற்றும் கடற்கரை சர்ச் முதல் மேலத் தெரு வரை. அன்புநகர் இரண்டு குறுக்குத் தெரு, வெள்ளைமாளிகை சாலை, பாத்திமா காலனி தெருக்களில் பேவர்கல் சாலை பதிக்கும் பணி | M/S.வெஙகடேஷ்வரா, கன்ஸ்டிரக்சன், 97/1 – யாதவா தெரு, வெளிப்பட்டிணம் (அஞ்சல்) இராமநாதபுரம். | ரூ 2,08,38,305/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.19% கூடுதல் |
| 2 | | திரு.எம்.கே.திருமுருகன் ஒப்பந்ததாரர், எண்.27, வடக்குபுதுத்தெரு, இராமநாதபுரம் | ரூ 2,16,79,479/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 8.40% கூடுதல் |

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

1. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அஙகீகரிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட 4.19% கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், மூலப்பொருட்களின் விலை மார்க்கெட்டில் கூடுதலாக உள்ளதை சுட்டிக் காட்டி விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.19 சதவீதம் கூடுதலாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.466</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 8</u>**

கீழக்கரை நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களாகப் பணிபுரிந்து பணியிடையே மரணமடைந்த வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரிய விண்ணப்பம் பரிசீலனை செய்து இந்நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தில் விதிமுறைகளின்படி பணி நியமனம் செய்ய பரிந்துரை செய்து வரப்பெற்றுள்ள மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.244/2018/அ2,நாள். 19.03.2018ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | இறந்த துப்புரவு பணியாளர்கள் பெயர் மற்றும் இறந்த தேதி | வாரிசுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | உறவு முறை | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1. | திரு.ஆ. சித்திரன்<br>இறப்பு தேதி<br>28.04.2013 | திரு.சி. லெட்சுமணன்,<br>த/பெ. ஆ.சித்திரன்<br>2/120, முத்துச்சாமிபுரம்,<br>கீழக்கரை | மகன் | 7 ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | திரு.மூ. இருளாண்டி<br>இறப்பு தேதி 03.04.2016 | திரு. இ. கல்யாணகுமார்<br>த/பெ. திரு.மூ. இருளாண்டி<br>2/44, முத்துச்சாமிபுரம்,<br>கீழக்கரை | மகன் | 7 ஆம் வகுப்பு தேர்ச்சி |

**(கோப்பு எண். 808/ 2015/ சி1 மற்றும் 1447/ 2017/ சி1)**

**அலுவலகக்குறிப்பு :-**

1. மதுரை, நகராட்சி நிர்வாகமண்டல இயக்குநர் அவர்களின் 19.03.2018ம் தேதிய கடிதம் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. தமிழ்நாடு நகராட்சிப் பொதுசுகாதாரப் பணியமைப்பின் (நிரந்தர மையப்படுத்தப் படாதவர்கள்), பணியமைப்பு விதிமுறைகள்–1976ன் கீழ், இந்நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தில் ஊதிய அட்டவணை (Pay Matrix) நிலை (Level)-1ல் அடிப்படை ஊதியம் (Basic Pay) ரூ. 15700/- வ.எண்:(1) ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.467** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உழுவை ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்த திரு.ச.அய்யப்பன் த/பெ.சக்கரை என்பவர் சக்கரை நோயால் உடல் நலம் பாதிக்கப்பட்டதால் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 10.07.2015ம் தேதி அவரது இடது கால் அறுவை சிகிச்சை செய்து துண்டிக்கப்பட்டு, இடது கால் ஊனமுற்ற நிலையில் ஓட்டுநர் பணியை செய்ய இயலாததால், தனது குடும்பத்தின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, தற்போது பெற்று வரும் ஊதியத்தில் மாற்றுப் பணி வழஙகுமாறு அன்னாரால் 31.12.2015ம் தேதி மருத்துவ சிகிச்சை அறிக்கையுடன் விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து திரு.ச.அய்யப்பன் உழுவை ஓட்டுநர் தனது உடல் நிலை குறித்து மருத்துவ சான்று வழஙகும் பொருட்டு, இராமநாதபுரம் அரசு மருத்துவமனை, மருத்துவக்குழு முன்பாக 10.03.2016–ம் தேதி அன்னார், நேரடியாக ஆஜராகி, மருத்துவர்களால் அவருக்கு மருத்தவ பரிசோதனை செய்யப்பட்டு, வழஙகப்பட்ட மருத்துவ அறிக்கையில் அன்னார் கடினமான வேலை செய்ய இயலாது (Not Fit to do Heavy Work) இலகுவான வேலை செய்ய தகுதியானவர் (May allot Light Work) என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், உழுவை ஓட்டுநர் பணியிடத்தில் பணி செய்ய இயலாத நிலையில், மாற்றுப் பணி வழஙகக் கோரி அன்னாரால் 11.03.2016ம் தேதி விண்ணப்பம் மீள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் விண்ணப்பஙகள் மற்றும் மருத்துவ குழு அறிக்கைகளின்படி மாற்றுப்பணி வழஙகுவதற்குரிய தெளிவுரை கோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழிமுறையாக 13.10.2016ம் தேதி கடிதம் அனுப்பப்பட்டது. அதில் திரு.ச. அய்யப்பன் என்பவர் பணிபுரிந்த, உழுவை ஓட்டுநர் பணியிடத்தை காலிப்பணியிடமாக அறிவித்து புதிய நியமனம் செய்வற்கு அனுமதியும், அரசாணை எண்.173, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (R) துறை நாள்.23.11.2005 மற்றும் அரசாணை எண்.60,

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.06.03.2007ல் குறிப்பிட்டது போல திரு.ச. அய்யப்பன் என்பவர் உழுவை ஓட்டுநர் பணியிடத்தில் பணியாற்றிய போது பெற்று வந்த ஊதியத்திலேயே இந்நகராட்சியில் தற்போது காலியாக உள்ள மோட்டார் இயக்குபவர் பணியிடத்திற்கு மாற்றம் செய்வதற்குரிய அனுமதியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை எண்.173, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (R) துறை நாள்.23.11.2005 ல் ஓட்டுநர் பணியிடத்தில் பணிபுரிபவர்களை மாற்றுப் பணி வழஙகும் பட்சத்தில் தற்போது பெற்று வரும் ஊதிய விகிதத்திலேயே, வழஙக அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதையும், மேற்காணும் அரசாணைக்கு, அரசாணை எண்.60, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.06.03.2007ல் பணிவிதிகளில் திருத்தம் (Amendment) மேற்கொள்ளவும் வழிவகை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதன்படி, கீழக்கரை நகராட்சியில் அலுவலக உதவியாளர் மற்றும் Helper பணியிடம் ஏதும் காலியாக இல்லாததாலும், இந்நகராட்சியில் மோட்டார் இயக்குபவர் பணியிடம் மட்டுமே காலியாக உள்ளதாலும், மோட்டார் இயக்குபவர் பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டால் தனியரால் வேலை செய்ய இயலும் என்று ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதின்படி, திரு.ச.அய்யப்பன் உழுவை ஓட்டுநர் பணியிடத்தில் பெற்று வரும் ஊதியம் ரூ.9790+2400 தர ஊதியம் (5200–20200+2400), மோட்டார் இயக்குபவர் பணியிட ஊதியம் ரூ.4800–10000+1300 தர ஊதியம் ஆகும். மேற்கண்ட அரசாணையின்படி, இந்நகராட்சியில் அலுவலக உதவியாளர் மற்றும் Helper பணியிடம் ஏதும் காலியாக இல்லாததால் திரு.ச.அய்யப்பன் உழுவை ஓட்டுநருக்கு மாற்றுப்பணியாக மோட்டார் இயக்குபவர் பணியிடத்தில் பணியமர்த்த அனுமதி கோரிய இவ்வலுவலக செயற்குறிப்பினை, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களால் 07.08.2017ம் தேதி பரிந்துரை செய்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் உழுவை ஓட்டுநர் திரு.ச. அய்யப்பன் அவர்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு காலில் அறுவை சிகிச்சை செய்து இடது கால் துண்டிக்கப் பட்டுள்ளதால் ஓட்டுநர் பணியை செய்ய இயலாததை தொடர்ந்து திரு.ச. அய்யப்பன் உழுவை ஓட்டுநருக்கு மாற்றுப் பணி வழஙக அனுமதி கோரிய மோட்டார் இயக்குபவர் பணியிடத்திற்குரிய நியமன அதிகாரி நகராட்சி ஆணையர் என்பதால், நடைமுறையில் உள்ள அரசாணை மற்றும் விதிமுறைகளை பின்பற்றியும், மனிதாபிமான அடிப்படையிலும், பணி ஏற்பாட்டின்படியும் (Working arrangement) மாற்றுப்பணி வழஙக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5611/2018/எப்3, நாள். 20.08.2018ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி பொருள் தொடர்பாக மாற்றுப்பணி வழஙகிய / வழஙக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் விபரத்தினை உடன் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைத்து, அதன் விபரத்தினை தெரிவிக்குமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண். 5205/2016/அ3, நாள். 12.10.2018ம் தேதிய கடிதத்தின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையின்படி மாற்றுப் பணி வழஙக அனுமதித்துள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதஙகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு இந்நகராட்சியில் அலுவலக உதவியாளர் மற்றும் Helper பணியிடம் ஏதும் காலியாக இல்லாததால், தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் மற்றும் குடிநீர் பணியமைப்பு விதிகள் 1970–ன் கீழ் இந்நகராட்சியில் காலியாக உள்ள மோட்டார் இயக்குபவர் பணியிடத்தில் தமிழ்நாடு பொதுசுகதாரப் பணியமைப்பு விதிகள் 1970–ன் கீழ் பணிபுரியும் உழுவை ஓட்டுநர் திரு.ச. அய்யப்பன் என்பவரை மாற்றுப் பணியாக (Post and provided with Alternative Employment), தற்போது உழுவை ஓட்டுநர் பணியிடத்தில் பெற்று வரும் ஊதிய விகிதத்தில் ரூ. 5200–20200+2400 (தர ஊதியம்) பணி மாற்றம் செய்து நியமனம் செய்து உத்திரவு வழஙகும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 477/ 2015/ சி1)**

அலுவலகக்குறிப்பு :-

1) சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.2018ம் தேதிய கடிதம் மற்றும் மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 12.10.2018ம் தேதிய கடிதம் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) அரசாணை எண்.60, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.06.03.2007ன்படி, இந்நகராட்சியில் அலுவலக உதவியாளர் மற்றும் Helper பணியிடம் ஏதும் காலியாக இல்லாததால் அரசாணை மற்றும் விதிமுறைகளை பின்பற்றியும், மனிதாபிமான அடிப்படையிலும் திரு.ச.அய்யப்பன் உழுவை ஓட்டுநருக்கு மாற்றுப்பணியாக மோட்டார் இயக்குபவர் பணியிடத்தில் பணியமர்த்த அனுமதிக்கலாம்.
3) அரசாணை எண்.173, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (R) துறை நாள்.23.11.2005—ல் தெரிவித்துள்ளவாறு ஓட்டுநர் பணியிடத்தில் பணிபுரிபவர்களை மாற்றுப் பணி வழஙகும் பட்சத்தில் தற்போது பெற்று வரும் ஊதியம் வழஙக அனுமதிக்கலாம்.
4) இந்நகராட்சியில் காலியாக உள்ள மோட்டார் இயக்குபவர் பணியிடத்தில் உழுவை ஓட்டுநர் திரு.ச. அய்யப்பன் என்பவரை மாற்றுப் பணியாக (Post and provided with Alternative Employment), தற்போது உழுவை ஓட்டுநர் பணியிடத்தில் பெற்று வரும் ஊதிய விகிதத்தில் ரூ. 5200—20200+2400 (தர ஊதியம்) பணி மாற்றம் செய்து நியமனம் செய்து உத்திரவு வழஙக அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.468 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 10

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் 2015—ம் ஆண்டில் பொருந்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்த 25W LED மின் விளக்குகளில் பழுதுகள் ஏற்பட்டு பல இடஙகளில் விளக்குகள் எரியமால் இருள் சூழ்ந்த காணப்படுகிறது. மேற்படி,பழுதான எரியாத நிலையில் உள்ள 25W LED மின் விளக்குகளை மாற்றி புதிய 25W LED மின் விளக்குகளை பொருந்துவதற்கு புதிதாக 50 எண்ணம் 25W LED மின் விளக்கு வாஙகி தரும்படி இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட பல இடஙகளில் LED மின் விளக்குகள் எரியாத நிலையில் இருந்து வருவதால்,பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளதாலும் அவற்றை சரிசெய்யும் பொருட்டு உடனடியாக 50 எண்ணம் 25W LED மின் விளக்கு வாஙகுவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1,60,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிருந்து மேற்கொள்ளவும், இராமநாதபுரம் மாவட்டம் கூட்டுறவு சிறப்பு அஙகாடியில் 25W LED மின் விளக்குகள் வாஙகி தரும்படி இந்நகராட்சி பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டி முன்வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.1158/2018/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. இந்நகர் மக்களின் நலன்கருதி தெருவிளக்கு பராமரிப்பு அவசியத்தை கருத்தில் கொண்டு உத்தேச செலவினம் ரூ.1,60,000—ஐ மன்றம் அஙகீகரிக்கலாம்.
2. 25W LED மின் விளக்குகள் கூட்டுறவு சிறப்பு அஙகாடியில் வாஙக மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.469 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி